## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.26/2011

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.T. இந்திரஜித், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 11.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பானுமதி (DW–1 ) | வயது | : | 65 /2026 |
| க/த பெயர் | : | திரு. இளங்கோவன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) தாவா சொத்தை எனது அப்பா 1981 இல் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது அப்பா கிரயம் வாங்கியதில் இருந்து ஜெயராமன் தான் எனது அப்பாவிற்காக கிரய ஒப்பந்தம் ஏற்படும் வரை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். ஜெயராமன் சாகுபடி செய்து நெல்லை கொண்டு வந்து எனது அப்பாவிடம் கொடுத்து விட்டு ரசீது என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை, நம்பிக்கையின் அடிப்படையில் ரசீது கொடுக்கவில்லை.
2) தாவா சொத்தை எனது அப்பா கிரயம் வாங்கியதில் இருந்து ஜெயராமன் தான் எனது அப்பாவிடம் கிரய ஒப்பந்தம் ஏற்படும் வரை குத்தகை சாகுபடி தாரராக இருந்தார் என்றால் சரியல்ல. அந்த குத்தகைக்காக தான் வருடா வருடம் நெல் எனது அப்பாவிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 2001 இல் இறந்தார். எனது அப்பா இறந்தபின்னர் தாவா சொத்தை எங்கள் வசம் ஒப்படைக்க வேண்டி ஜெயராமன் மீது எந்தவிட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஜெயராமன் வீடு கட்டியதால் நடவடிக்கை எடுக்கவில்லை, மாட்டு கொட்டகை, கூரை வீடு கட்டியதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.
3) 02.09.2010 இல் ஜெயராமனுக்கு நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் நானும் எனது தம்பியும் சேர்ந்து அனுப்பினோம். தாவா சொத்து எனது பெயரிலும் எனது தம்பி பெயரிலும் கிராம கணக்கு பதிவேடுகளில் பதிவு உள்ளது என்றால் சரிதான். எனது தம்பி மனைவி மற்றும் குழந்தைகள் பெயர் என்வென்றால் எனது தம்பி மனைவி பெயர் தேவி, அவரது மகன்கள் பெயர் ஐயப்பன், நரசிம்மன். இந்த வழக்கை நான் மட்டும்தான் நடத்தி வருகிறேன், எனது தம்பி நடத்தவில்லை என்றால் சரிதான்.
4) வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சிங்காரவேலு கையெழுத்தானது எனது அப்பாவின் கையெழுத்து என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சிங்காரவேலு கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து இல்லை என்பதை நிரூபிக்க வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது, அதை நிரூபிக்க

தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். இதுநாள்வரை எனது அப்பாவின் கையெழுத்து தொடர்பான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) எனது அப்பா கையெழுத்திட்ட ஆவணங்கள் என்னிடம் எதுவும் இல்லை என்றும், இந்த வழக்கில் எதிர்வாதம் செய்வதற்காக அவ்வாறு ஆவணங்கள் இருப்பதாகவும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவினுடையது இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது எனது அப்பா தாவா சொத்து குறித்து பெரும்பான்மை பணத்தை வாங்கி கொண்டார் என்றும் மீதமுள்ள பணத்தை பெற்றுக்கொண்டு கிரய ஆவணம் எழுதி கொடுக்கவேண்டும் என வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6) தாவா சொத்துக்களை எனது அப்பாவின் வாரிசுதாரர் என்ற முறையில் வாதியிடமிருந்து கூடுதலாக பணத்தை பெற்றுக்கொண்டு விற்பனை செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. சிங்காரவேலுவின் வாரிசுதாரர் என்ற முறையில் நானும் எனது தம்பியும் தாவா சொத்துக்களை வாதிகளுக்கு கிரயம் செய்து கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்த பின்னர் தாவா சொத்துக்களை வாதிகளிடம் விற்பனை செய்தது தொடர்பாக பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை.

7) ஜெயராமன் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்து தொடர்பான மீதமுள்ள தொகையை கொடுத்து கிரயம் செய்து கொள்ள தயாராகவும் விருப்பமாகவும் இருந்தார் என்றும் அவர் இறந்த பின்னர் ஜெயராமன் வாரிசுதாரர்கள் தாவா சொத்து தொடர்பான மீதமுள்ள தொகையை கொடுத்து கிரயம் செய்து கொள்ள தயாராகவும் விருப்பமாகவும் இருக்கிறார்கள் என்றும் ஆனால் தாவா சொத்தை வாதிகளுக்கு கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மறுத்து வருகிறோம் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்தானது திருவாரூர் மெயின்ரோட்டில் இருந்து பார்க்கும் வகையில் அமைந்துள்ள சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பல முறை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாதிகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தில் வாதிகள் வீடு கட்டுவதற்கு ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்து, தாவா வழக்கை தாக்கல் செய்யும் வரை எனது அப்பா தாவா சொத்தை வாதிக்கு விற்பனை செய்வதற்கு உடன்பட்டதால் தான் தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருக்கலாம் என்ற நல்ல எண்ணத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

9) எனக்கும் ஜெயராமனுக்கும் வழக்கிற்கு முன்பு எந்தவித விரோதமும் இல்லை என்றால் சரிதான், சாதாரணமாக பேசி வந்தோம். வேறு ஒருவர் தூண்டுதலின் பேரில்தான் இந்த வழக்கில் எதிர் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

எனது அப்பா எழுதி கொண்ட கிரய ஒப்பந்தப்படி வாதிகளுக்கு தாவா சொத்தை நானும் எனது சகோதரும் வாதிகளுக்கு கிரய ஆவணம் எழுதி கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

10) சேகர் மற்றும் அவரது வாரிசுதாரர்களும் இருக்கும் விபரத்தை தெரிந்து வேண்டுமென்றே சேகர் எங்கோ சென்று விட்டார் என்று பொய்யாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் மட்டும் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் உண்மை விபரங்களை மறைத்து கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. சேகர் காணாமல் போனது உண்மையாக இருந்தால் அது குறித்து விளம்புகை பரிகாரம் வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும் மேலும் சேகரின் வாரிசுதாரர்களை இந்த வழக்கில் வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற தகவல்களை நீதிமன்றத்தில் தெரியபடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.12 15:34:52 +0530

District Munsif
Mannargudi.